DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **STC 2074/2024** |
| Deposition of Witness for | : PW 4 |
| Name | : திரு. சசிகுமார் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 03.06.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 03 June 2026.

எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

முதல்விசாரணை:

நான் தற்போது கரிவலம்வந்தநல்லூர் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் அசிர் ஜெபக்குமார் மற்றும் உதவி ஆய்வாளர் வேல்பாண்டியன் ஆகியோர்கள் கையொப்பம் நன்கு தெரியும். அவர்கள் தற்போது பணிமாறுதலாகி வேறு மாவட்டங்களுக்கு சென்று விட்டார்கள். வழக்கின் சூழ்நிலைக்கருதி ஆவணங்களை பார்த்து சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 03.02.2024–ம் தேதி 10.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் அசிர் ஜெபக்குமார் நிலையப்பொறுப்பில் இருந்தபோது கரிவலம்வந்தநல்லூர் பாரதி நகரை சோந்த

சக்திவேல் மகன் குமார் என்பவர் கொடுத்த புகார் மனு பெற்று அதன்தன்மைக்கேற்ப காவல்நிலையக்குற்ற எண்.34/2024 இ.த.ச.பிரிவுகள் 147, 294(பி), 323, ,506(i) IPC–ன்படி முதல்தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **அந்த புகார் மனு அ.சா.ஆ.2 ஆகும். முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் வழக்கு கோப்பினை உதவி ஆய்வாளர் வேல்பாண்டியன் அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டார். அதனைத் தொடர்ந்து, அன்றையதினமே 11.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் வரலட்சுமி, வீரலட்சுமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் குமார், கார்த்திக், ராஜா, கருப்பசாமி, வரலட்சுமி, வீரலட்சுமி மற்றும் முதல்தகவல் அறிக்கை பதிவுசெய்த சிறப்பு உதவி ஆய்வாளர் அசிர் ஜெபக்குமார் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்தார். அதன் அடிப்படையில் குற்ற எண்.34/2024 இ.த.ச.பிரிவுகள் 147, 294(பி), 323, ,506(i) IPC–ல் இருந்து 294(பி)–யாக சட்டப்பிரிவு மாற்றம் செய்து அதன் அறிக்கையை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் சங்கரன்கோவிலில் தாக்கல் செய்தார். அந்த சட்டப்பிரிவு மாற்றம் செய்த அறிக்கை **அ.சா.ஆ.6** ஆகும். எதிரிகள் தலைமறைவாக இருந்து பிணை எதுவும் பெறவில்லை. அதனால் வழக்கு விசாரணை முடித்து 20.04.2024–ம் தேதி எதிரிகள் மீது இ.த.ச.பிரிவு 294(பி) IPC–ன்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் முதல்விசாரணையில் கூறிய நாள் நேரத்தில் புகார் மனுவைப் பெற்று வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றாலும், சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும், அரசுதரப்பு

சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

(Sd/-)M.Mari

Judicial Magistrate,

Sankarankovil.